THE NEW INDIAN EXPRESS 28 JAN 2025

DEADLINE ENDS

# 246 senior citizens & PwDs cast ballots in Erode bypoll

EXPRESS NEWS SERVICE @Erode

THE casting of votes via postal ballots by registered voters aged above 85 and those with disabilities closed on Monday. 246 people have cast postal votes.

The casting of votes via postal ballots began on January 23 for Erode East by-election scheduled for February 5. Earlier, Form 12D was distributed to 2,529 voters above the age of 85 and 1,570 differently-abled voters. In this, a total of 209 voters above the age of 85 and 47 persons with disabilities expressed willingness and submitted the form to booth-level officers. The casting of votes via postal ballots closed on Monday and of 256 registered people, 246 cast votes.

Raja Gopal Sunkara, the District Election Officer, in a statement on Monday, said, "237 polling booths have been set up in Erode East constituency. Senior citizens and differently-abled persons who require transportation facilities on polling day can call 9600479643, 0424 1950 or 0424 2267674."

Scanned with OKEN Scanner

இந்து தமிழ்    28 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# வார்டு வாரியாக பூத் சிலிப் வழங்கும் பணி தொடக்கம்

## தேர்தல் அலுவலர்களுக்கு 2-ம் கட்ட பயிற்சி

ஈரோடு


ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு, வார்டு வாரியாக பூத் சிலிப் வழங்கும் பணி நேற்று தொடங்கியது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ம் தேதி நடக்கிறது. இதற்காக, 53 இடங்களில், 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டு, அவற்றிற்கு கூடுதல் பாதுகாப்பு மற்றும் கூடுதல் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதியில் தி.மு.க, நாம் தமிழர் கட்சி மற்றும் சுயேச்சைகள் என 46 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக, பூத்சிலிப் வழங்கும் பணி நேற்று தொடங்கியது. ஈரோடு மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஈரோடு மாநகராட்சி பகுதியில் உள்ள 60 வார்டுகளில் 33 வார்டுகள் ஈரோடு கிழக்கு தொகுதியை உள்ளடக்கியதாகும். இதில், வார்டு வாரியாக வாக்காளர்களின் வீடுகளுக்குச் செல்லும் அலுவலர்கள், அவர்களது வாக்காளர் அடையாள அட்டையை பரிசோதித்து, அதன் அடிப்படையில் பூத் சிலிப் வழங்கி வருகின்றனர்.

இப்பணி பிப்ரவரி 1-ம் தேதி வரை நடைபெறும் என அலுவலர்கள் தெரிவித்தனர்.



• ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பணியில் ஈடுபட உள்ள தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி முகாமில், மாவட்ட தேர்தல் அலுவலர் ராஜ கோபால் சுன்கரா பேசினார்.

### தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சி

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 1,194 அலுவலர்கள் தேர்தல் பணி ஆற்றவுள்ளனர். இவர்களுக்கு கடந்த 19-ம் தேதி முதல்கட்டமாக பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, ரங்கம்பாளையத்தில் உள்ள தனியார் கல்லூரியில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நேற்று இரண்டாம் கட்டமாக பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் வாக்குப்பதிவின்போது வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுது ஏற்பட்டால் அவற்றை எவ்வாறு சரி செய்வது, வாக்குச்சாவடிகளில் அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, வரும் பிப்ரவரி 3-ம் தேதி இறுதிக்கட்ட பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் முடிவில், அவர்கள் வாக்குச்சாவடிகளில் பணிபுரிவதற்கான ஆணை வழங்கப்படும். அதே நாளில், தேர்தல் பணியாற்றுவோர் தபால் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி முகாமை, ஈரோடு மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியும், ஆட்சியருமான ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்குத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் மற்றும் அலுவலர்கள் தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Erode East Assembly Constituency By-election.
Distribution of booth slips started ward wise.
2nd Phase training for the polling officials.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ்    28 JAN 2025

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் 246 தபால் வாக்குகள் பதிவு

## புதிய வாக்காளர்களுக்கு அடையாள அட்டை விநியோகம் தொடக்கம்

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதியில் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என மொத்தம் 246 பேர் தபால் வாக்கு அளித்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிக்க முடியாத 85 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, 256 பேர் வீடுகளில் இருந்து தபால் வாக்களிக்க 12டி விண்ணப்பத்தை அளித்து இருந்தனர்.

இவர்களின் வீடுகளுக்கு சென்றுதபால்வாக்குபதிவுசெய்ய 4 குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுவினர் கடந்த 23-ம் தேதி தொடங்கி 24, 25-ம் தேதிகளில் தபால் வாக்குகளை பதிவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இதன் தொடர்ச்சியாக, தபால் வாக்குகள் பதிவு செய்யும் பணி இறுதிநாளான நேற்று மாலை நிறைவடைந்தது.

இதில், வீட்டில் இருந்தவாறே தபால் வாக்கு செலுத்த ஒப்புதல் அளித்து இருந்த 256 பேரில், 85 வயதுக்கு மேற்பட்ட 6 நபர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும், ஒரு வாக்காளர் இடமாறுதல் ஆனதாலும், 3 வாக்காளர்கள் மரணமடைந்ததாலும், மொத்தம் 10 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. தபால் வாக்குப்பதிவு முடிவில், 85 வயதிற்கு மேற்பட்ட 199 பேர், 47 மாற்றுத்திறனாளிகள் என 246 வாக்காளர்கள் வாக்கு செலுத்தியுள்ளனர்.



ஈரோடு கிழக்கு தொகுதியைச் சேர்ந்த 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர் ஒருவர் நேற்று தனது தபால் வாக்கினைப் பதிவு செய்தார்.

### புதிய அடையாள அட்டை

ஈரோடு மாவட்டத்தில் உள்ள சட்டப்பேரவை தொகுதி வாரியாக, கடந்த 6-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதன்படி, மாவட்டத்தில் உள்ள 8 சட்டப்பேரவை தொகுதிகளில், 19 லட்சத்து 77 ஆயிரத்து 419 வாக்காளர்கள் உள்ளனர். இதில், புதியதாக 35 ஆயிரத்து 855 பேர் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டனர். மாவட்ட அளவில் புதிய வாக்காளர்கள் மற்றும் அடையாள அட்டையில் திருத்தம் கோரி விண்ணப்பித்த 49 ஆயிரத்து 295 வாக்காளர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது.

இதில் முதல்கட்டமாக 19 ஆயிரத்து 172 பேருக்கு புதிய அடையாள அட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதியில் மட்டும் புதியதாக இணைந்த, புதிய வாக்காளர்கள் மற்றும் ஏற்கெனவே அடையாள அட்டை வைத்திருந்து, திருத்தம் மேற்கொண்டவர்கள் என 1,500 பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ளவர்களுக்கு படிப்படியாக அடையாள அட்டை அனுப்பி வைக்கப்படும் என தேர்தல் அலுவலர்கள் தெரிவித்தனர்.

### வாக்களிக்க வாகன வசதி

இதனிடையே ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவின் போது, 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், வாக்குச்சாவடிக்குச் சென்று தங்களது வாக்கினை செலுத்த தேர்தல் ஆணையம் சார்பில் வாகன வசதி செய்யப்பட உள்ளது. வாகன வசதி வேண்டுவோர், 0424-1950மற்றும் 0424 – 2267674, 2267675,2267679, 96004 79643 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
246 persons cast their postal votes.
Distribution of ID cards for new voters started.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 28 JAN 2025

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில்

# தபால் வாக்குப்பதிவு நிறைவு

## 246 பேர் ஓட்டுப்போட்டனர்

ஈரோடு, ஜன.28-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் தபால் வாக்குப்பதிவு நேற்று நிறைவடைந்தது. இதில் 246 பேர் ஓட்டுப்போட்டுள்ளனர்.

### தபால் வாக்கு

ஈரேர்டு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு 100 சதவீதம் வாக்குப்பதிவு என்கிற இலக்குடன் தேர்தல் ஆணையம் பல்வேறு ஏற்பாடுகள் செய்துள்ளது. அதன்படி தேர்தலில் வாக்குச்சாவடிகளுக்கு வர முடியாத 85 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகளிடம் முன்கூட்டியே தபால் வாக்குகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி '12 டி' படிவத்துடன் முன்கூட்டியே தபால் வாக்குகள் அளிக்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2 ஆயிரத்து 529 பேரில் 209 பேரும், மாற்றுத்திறனாளிகள் 1,570 பேரில் 47 பேரும் என 256 பேர் தபால் வாக்களிக்க ஒப்புதல் அளித்திருந்தனர். அதன்படி அவர்களிடம் வீடு வீடாக சென்று ஓட்டுகளை பெற முடிவு செய்யப்பட்டது.

### வீடுகளில்...


ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டர் ராஜகோபால் சுன்கரா ஆலோசனையின் பேரில், ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி எச்.எஸ்.ஸ்ரீகாந்த் தலைமையிலான தேர்தல் அதிகாரிகள் 4 குழுக்கள் அமைத்து தபால் வாக்குப்பதிவை நடத்தினர்.

கடந்த 23-ந் தேதி தொடங்கிய இந்த வாக்குப்பதிவு நேற்று நிறைவடைந்தது. முதல் நாளில் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 90 பேரும், மாற்றுத்திறனாளிகள் 26 பேரும் என 116 பேர் வாக்களித்து இருந்தனர். 85 வயது முதல் 95 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரை உள்ளவர்கள் வீடுகளில் இருந்து கொண்டே தங்கள் ஓட்டுகளை பதிவு செய்தனர்.

### 246 பேர் ஓட்டுபோட்டனர்

4 நாட்கள் நடந்த இந்த தபால் வாக்குப்பதிவு நேற்று நிறைவடைந்தது. மொத்தம் உள்ள 256 பேரில் 3 பேர் சமீபத்தில் மரணம் அடைந்துவிட்டனர். 7 பேர் குறிப்பிட்ட முகவரியில் இல்லை. எனவே இந்த 10 பேரை தவிர்த்து 246 வாக்குகளை தபால் வாக்குகளாக அதிகாரிகள் பெற்றுள்ளனர்.

வாக்குப்பதிவு நிறைவடைந்ததும் ஓட்டுப்பெட்டிகள் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு ஒரு அறையில் பாதுகாப்பாக வைத்து பூட்டி சீல் வைக்கப்பட்டது. தொடர்ந்து ஓட்டு எண்ணிக்கை அன்று தபால் வாக்குப்பெட்டிகள் வாக்கு எண்ணும் மையத்துக்கு கொண்டு செல்லப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தபால் ஓட்டுபெட்டிகள் வைக்கப்பட்ட அறைக்கு சீல் வைக்கப்பட்ட காட்சி.

Erode East Assembly Constituency By-election.
Postal voting ends.
246 persons cast their postal votes.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 28 JAN 2025

### ஈரோடு கிழக்கு தொகுதியில்

# 75,288 வாக்காளர்களுக்கு ‘பூத் சிலிப்’

ஈரோடு, ஜன.28-

ஈரோடு கிழக்கு தொகுதியில் 75 ஆயிரத்து 288 வாக்காளர்களுக்கு ‘பூத் சிலிப்’ வழங்கப்பட்டுள்ளது.

## ‘பூத் சிலிப்’

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். தேர்தலை முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமையில் பல்வேறு முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



ஈரோடு மணல்மேடு பகுதியில் வாக்காளர்களுக்கு ‘பூத் சிலிப்’ வழங்கப்பட்டபோது எடுத்த படம்.

### 75,288 வாக்காளர்களுக்கு...

இந்த நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள வாக்காளர்களுக்கு நேற்று முன்தினம் முதல், 237 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ‘பூத் சிலிப்’ வழங்கும் பணியை தொடங்கி உள்ளனர். அதன்படி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஒவ்வொரு வார்டிலும் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களது வாக்காளர் அடையாள அட்டையை பரிசோதனை செய்து வாக்களிக்க செல்லும் போது எடுத்து செல்ல வேண்டிய பூத் சிலிப்பை வழங்கி வருகின்றனர்.

நேற்று முன்தினம் 40 ஆயிரத்து 429 வாக்காளர்களுக்கும், நேற்று 34 ஆயிரத்து 859 வாக்காளர்களுக்கும் என கடந்த 2 நாட்களில் மொத்தம் 75 ஆயிரத்து 288 வாக்காளர்களுக்கு ‘பூத் சிலிப்’ வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த பணி வருகிற 31-ந்தேதி வரை நடைபெறும் என்றும் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election. Booth slips are being distributed to 75288 voters.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 28 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு 2–ம் கட்ட பயிற்சி அளிக்கப்பட்டபோது எடுத்த படம்.

# வாக்குச்சாவடி அலுவலர்கள் 1,194 பேருக்கு பயிற்சி

ஈரோடு, ஜன.28-

ஈரோட்டில் வாக்குச்சாவடி அலுவலர்கள் 1,194 பேருக்கு பயிற்சி நடந்தது.

### பயிற்சி

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு தேர்தல் ஆணையம் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது. அதன்படி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள 237 வாக்குச்சாவடிகளிலும் வாக்குப்பதிவு பணியில் ஈடுபட உள்ள வாக்குச்சாவடி அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை 1 முதல் 4 வரையான அலுவலர்களுக்கு ரங்கம்பாளையத்தில் உள்ள டாக்டர் ஆர்.ஏ.என்.எம். கலை அறிவியல் கல்லூரியில் நேற்று 2-ம் கட்ட பயிற்சி நடந்தது.

284 வாக்குச்சாவடி அலுவலர்கள், நிலை 1, நிலை 2, நிலை 3 அலுவலர்கள் தலா 284 பேர், நிலை 4 அலுவலர்கள் 58 பேர் என மொத்தம் 1,194 பேர் பயிற்சி பெற்றனர். ஈரோடு மாநகராட்சி ஆணையாளரும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான எச்.எஸ்.ஸ்ரீகாந்த் முன்னிலையில் பயற்சி நடந்தது. ஊரகவளர்ச்சித்துறை உதவி திட்ட அதிகாரி மகேஸ்வரி பயிற்சி அளித்தார்.

### மாதிரி வாக்குப்பதிவு

வாக்குச்சாவடி பணிக்கு சென்றதும் வாக்குச்சாவடி அலுவலர்கள் செய்ய வேண்டிய பணிகள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் பணிகள் குறித்து எடுத்துக்கூறப்பட்டது. மின்னணு வாக்குப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு கருவி, விவிபேட் கருவிகளை சரியாக இணைக்க பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், தேர்தல் நாள் அன்று அதிகாலை 5.30 மணி முதல் 6.30 மணிக்குள் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு நடத்த வேண்டும். சரியாக 7 மணிக்கு வாக்காளர்கள் அனுமதிக்கப்பட்டு முறையான வாக்குப்பதிவு தொடங்க வேண்டும் என்ற அறிவுரை வழங்கப்பட்டது.


தேர்தல் நடக்கும்போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பழுது ஏற்பட்டால் அதை சரிசெய்யும் வழிமுறைகள் குறித்தும், தேர்தல் மாலை 6 மணிக்கு நிறைவடைந்ததும், நிரப்ப வேண்டிய படிவங்கள், வாக்குப்பதிவு எந்திரங்களை சீல் செய்யும் வழி முறைகள் மற்றும் மண்டல அதிகாரியிடம் வாக்குப்பதிவு எந்திரங்கள் ஒப்படைக்கும் முறை என அனைத்து பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. இதில் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி தியாகராஜன், தாசில்தார் ஜெகநாதன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

Election training was given to 1194 Polling Officials.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 28 JAN 2025

## மாதிரி வாக்குச்சாவடியில் கலெக்டர் ஆய்வு



ஈரோடு, ஜன.28-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு தேர்தலுக்கான பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. நேற்று வாக்குச்சாவடிகளில் பணியாற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான 2-ம் கட்ட பயிற்சி ரங்கம்பாளையம் டாக்டர் ஆர்.ஏ.என்.எம். கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது. இங்கு மாதிரி வாக்குப்பதிவு மையம் அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த மையத்தை ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டர் ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவர் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் சரியாக செயல்படுகிறதா? பொத்தான்களை அழுத்தும்போது வேட்பாளரின் பெயர், சின்னத்தில் சரியாக வாக்கு பதிவாகிறதா? என்பதையும் சோதனை செய்தார். அப்போது ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியான மாநகராட்சி ஆணையாளர் ஸ்ரீகாந்த், உதவி திட்ட அதிகாரி மகேஸ்வரி ஆகியோர் உடன் இருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Officer/Erode District Collector inspects the mock polling station.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 28 JAN 2025

தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனை:

# ஜவுளி வியாபாரியிடம் ரூ.87 ஆயிரம் பறிமுதல்

ஈரோடு, ஜன.28-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வாக்காளர்களுக்கு பரிசு பொருட்கள், பணம் உள்ளிட்டவைகளை கொடுப்பதை தடுக்கும் வகையில், பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டு, உரிய ஆவணங்களின்றி ரூ.50 ஆயிரத்து மேல் எடுத்து வந்தால் அவற்றை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தேர்தல் பறக்கும் படை அலுவலர் நவீன் தலைமையிலான அதிகாரிகள், ஈரோடு கருங்கல்பாளையம் சோதனைச்சாவடியில் நேற்று முன்தினம் வாகன தணிக்கையில் ஈடுபட்டபோது, அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது காரில் ரூ.87 ஆயிரத்து 500 எடுத்து வரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து காரை ஓட்டி வந்தவரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர், சேலம் மாவட்டம் சங்ககிரி பகுதியை சேர்ந்த ஜவுளி வியாபாரி மயிலானந்தம் என்பதும், அவர் கொண்டு வந்த பணத்துக்கு உரிய ஆவணம் இல்லை என்பதும் தெரியவந்தது. இதையடுத்து, அந்த பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்து, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தனர். இதுவரை ஈரோடு கிழக்கு தொகுதியில் உரிய ஆவணங்களின்றி எடுத்துவரப்பட்ட ரூ.36 லட்சத்து 24 ஆயிரத்து 560 பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து ரூ.12 லட்சத்து 93 ஆயிரத்து 60 உரியவர்களிடம் திரும்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ரூ.23 லட்சத்து 31 ஆயிரத்து 500 மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Flying squad seized Rs.87 thousand from a textile trader.

Scanned with OKEN Scanner

தினமலர் 28 JAN 2025



ஈரோட்டில் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி நடைபெற்றது.

# ஈரோட்டில் 2 நாட்களில் 75 ஆயிரம் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கல்

ஈரோடு, ஜன.28-

ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தல் முன்னிட்டு 53 இடங்களில் 237 வாக்குச் சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தேர்தலையொட்டி மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமையில், கிழக்குத் தொகுதியில் தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் மற்றும் அலுவலர்கள் தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகளை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் ஈரோடு கிழக்குத் தொகுதியில் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் உள்ளனர். அதன்படி வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி தொடங்கியுள்ளது. இப்பணியை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் ஈரோடு கிழக்குத் தொகுதிக்குட்பட்ட ஒவ்வொரு வார்டிலும் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களது வாக்காளர் அடையாள அட்டையை பரிசோதித்து வாக்களிக்கும் போது எடுத்துச் செல்ல வேண்டிய பூத் சிலிப்பை வழங்கி வருகின்றனர். அதன்படி நேற்று முன்தினம் (26ம் தேதி) முதல் பூத் சிலிப் வழங்கும் பணி நடந்து வருகிறது.

இதில் 26ம் தேதி 40 ஆயிரத்து 429 வாக்காளர்களுக்கும், 27ம் தேதி 34 ஆயிரத்து 849 வாக்காளர்கள் என மொத்தம் 75 ஆயிரத்து 288 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி 31ம் தேதி வரை நடைபெற உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

In 2 days, 75 thousand booth slips were distributed to the voters in Erode.

Scanned with OKEN Scanner

தினமலர் 28 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் 246 தபால் ஓட்டுகள் பதிவு

ஈரோடு, ஜன. 28-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் அனைவரும் வாக்களிக்கும் வகையில் தேர்தல் கமிஷன் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன்படி ஓட்டு சாவடிக்கு சென்று வாக்களிக்க முடியாத 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்குகளை செலுத்தும் வழிமுறை அறிவிக்கப்பட்டது.

அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2 ஆயிரத்து 529 பேர், மாற்றுத்திறனாளிகள் ஆயிரத்து 570 (1,570) பேர் என மொத்தம் 4 ஆயிரத்து 99 பேர் உள்ளனர். இவர்களில் முதியவர்கள் 209 பேர், மாற்றுத்திறனாளிகள் 47 பேர் என 256 வாக்காளர்கள் தங்களது வாக்குகளை தபால் மூலமாக செலுத்திட விருப்பம் தெரிவித்திருந்தனர். இதற்காக தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவ்டி நிலை அலுவலர்கள் கடந்த 15ம் தேதிக்கு முன்னரே 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்காளர்களிடம் தபால் வாக்குகளை செலுத்துவதற்கான படிவம் 12 டி யை வழங்கி ஒப்புதல் பெற்றிருந்தனர்.

அதன்படி தபால் வாக்குகள் செலுத்தும் பணி கடந்த 23, 24, 25 மற்றும் 27 (நேற்று) ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இவர்களில் 85 வயதுக்கு மேற்பட்ட 6 நபர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டும், ஒரு வாக்காளர் இட மாறுதலிலும், 3 வாக்காளர்கள் மரணமடைந்துள்ளனர். மொத்தம் 10 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. மேலும் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 199 பேர் மற்றும் 47 மாற்று திறனாளிகள் என 246 வாக்காளர்கள் தபால் வாக்குகளை செலுத்தியுள்ளனர்.



ஈரோட்டில் தபால் ஓட்டு போட்ட முதியவர்.

246 persons cast their postal votes in Erode East Assembly Constituency By-election.

Scanned with OKEN Scanner

தினமலர் 28 JAN 2025

# ஈரோட்டில் 19 ஆயிரம் வாக்காளர்களுக்கு தபால் மூலம் அடையாள அட்டை வழங்கல்

ஈரோடு, ஜன. 28-

ஈரோடு மாவட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட மற்றும் ஏற்கனவே வாக்காளர் அடையாள அட்டை வைத்து புதுப்பித்தவர் என 49 ஆயிரத்து 295 பேருக்கு புதிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.


ஈரோடு மாவட்டத்தில் கடந்த 6ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மாவட்டத்தில் உள்ள 8 சட்டசபை தொகுதிகளில் 19 லட்சத்து 77 ஆயிரத்து 419 வாக்காளர்கள் உள்ளனர். புதிதாக 35 ஆயிரத்து 855 பேர் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டனர். இவர்களுடன் ஏற்கனவே வாக்காளர் அடையாள அட்டை பெற்று முகவரி, போட்டோ, தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்களை மாற்றம் செய்தவர்களுக்கும் புதிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. இதன்படி மொத்தம் 49 ஆயிரத்து 295 வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக 19 ஆயிரத்து 172 பேருக்கு புதிய அடையாள அட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு படிப்படியாக வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் ஈரோடு கிழக்கு தொகுதியில் மட்டும் புதிதாக இணைந்த புதிய வாக்காளர்கள் மற்றும் ஏற்கனவே அடையாள அட்டை வைத்திருந்து திருத்தம் செய்து கொண்டவர்கள் என 1,500 பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

19 thousand new voter ID cards were sent by post in Erode.

Scanned with OKEN Scanner

தினமலர் 28 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு தேர்தல் அலுவலர்களுக்கு நடைபெற்ற 2ம் கட்ட பயிற்சி வகுப்பை மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டார்.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் தேர்தல் அலுவலர்களுக்கு 2ம் கட்ட பயிற்சி

ஈரோடு, ஜன.28-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் அலுவலர்களுக்கு 2ம் கட்ட பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் 237 வாக்குச்சாவடிகளுடன் கூடுதலாக 20 வாக்குச்சாவடிகள் சேர்த்து 284 முதன்மை அலுவலர், முதல் நிலை அலுவலர், 2ம் நிலை அலுவலர்; 3ம் நிலை அலுவலர்கள் மற்றும் 1,200 வாக்காளர்களைக் கொண்ட வாக்குச் சாவடிகளுக்கு கூடுதலாக 58 4ம் நிலை அலுவலர்கள் என 1,194 அலுவலர்கள் பணியாற்ற உள்ளனர். இவர்களுக்கு கடந்த 19ம் தேதி முதற்கட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நேற்று ஈரோடு ரங்கம்பாளையத்தில் உள்ள ஆர்.ஏ.என்.எம் கலை அறிவியல் கல்லூரியில் 2ம் கட்ட பயிற்சி நடந்தது. இவர்களுக்கு மண்டல அலுவலர்கள் பயிற்சி அளித்தனர்.


இதில் வாக்குப்பதிவின்போது வாக்குப்பதிவு மிஷின்கள் பழுது ஏற்பட்டால் அவற்றை எவ்வாறு சரி செய்வது? வாக்குச்சாவடிகளில் அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து 3ம் தேதி இறுதிக்கட்ட பயிற்சி அளிக்கப்படுகிறது. தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு தபால் ஓட்டு போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு எந்தெந்த வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றுவது என்பது குறித்த ஆணை வழங்கப்பட உள்ளது. முன்னதாக தேர்தல் அலுவலர்களுக்கு வழங்கப்படும் 2ம் கட்ட பயிற்சியை மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டார்.

2nd Phase training for polling officials in Erode East Assembly Constituency By-election.

Scanned with OKEN Scanner

தினகரன் 28 JAN 2025

# ஈரோடு இடைத்தேர்தலுக்கான தபால் வாக்குப்பதிவு நிறைவு



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 85 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான வாக்குப்பதிவு நேற்று முடிவடைந்து மாநகராட்சி அலுவலகத்திற்கு பெட்டிகள் கொண்டுவரப்பட்டன. அடுத்தபடம்: அதிகாரிகள் அறைக்கு சீல் வைத்தனர்.

## முதியோர், மாற்றுத்திறனாளிகள் 246 பேர் வாக்களிப்பு

ஈரோடு, ஜன. 28: ஈரோடு இடைத்தேர்தலில் தபால் வாக்குப்பதிவு நேற்றுடன் நிறைவு பெற்ற நிலையில், தபால் வாக்களிக்க விருப்பம் தெரிவித்த 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 246பேர் தங்களது ஜனநாயக கடமையாற்றி உள்ளனர்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில், வாக்குச்சாவடிகளுக்கு நேரடியாக வந்து வாக்களிக்க முடியாத 85 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் தபால் வாக்குப்பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. இதற்காக 12டி படிவம் விநியோகம் செய்யப்பட்டது. இதில், ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட 85 வயதுக்கு மேற்பட்ட 209 வாக்காளர்களும், மாற்றுத்திறனாளிகள் 47 வாக்காளர்கள் என மொத்தம் 256 பேர் விருப்பம் தெரிவித்தனர். இவர்களுக்கான தபால் வாக்குப்பதிவு கடந்த 23ம் தேதி தொடங்கியது.

தபால் வாக்கு சேகரிப்பதற்காக அமைக்கப்பட்ட 4 குழுக்களுக்களும் நேரடியாக தபால் வாக்களிக்க விருப்பம் தெரிவித்த முதியோர், மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று தேர்தல் விதிமுறைகளைபடி தபால் வாக்குகளை சேகரித்தனர். இதில், கடந்த 25ம் தேதி 242 பேர் தபால் வாக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில், மீதமுள்ள 14 பேரிடம் தபால் வாக்கு சேகரிப்புக்கான இறுதி நாளான நேற்று தேர்தல் பிரிவு அலுவலர்கள் அவர்களது வீடுகளுக்கு சென்றனர். இதில், 3 பேர் வயது முதிர்வின் காரணமாக இறந்துவிட்டனர். 7 பேர் தவிர்க்க முடியாத காரணத்தினாலும் வாக்கு செலுத்த முடியவில்லை. தொடர்ந்து 4 பேரிடம் தபால் வாக்கு சேகரிக்கப்பட்டது. இதில், கடைசி வாக்குப்பதிவாக ஈரோடு மணல் மேடு பகுதியை சேர்ந்த 103 வயதமான பெரியண்ணன் என்பவரிடம் தபால் வாக்குப்பதிவு செய்து, நிறைவு செய்யப்பட்டது. இதன்மூலம் தபால் வாக்கு செலுத்த விருப்பம் தெரிவித்த 256 பேரில், 246 பேர் தபால் வாக்கு செலுத்தி தங்களது ஜனநாயக கடமையாற்றி ள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
Postal balloting ends.
246 voters cast their postal votes.

Scanned with OKEN Scanner

**தினகரன்** 28 JAN 2025

பிப்ரவரி 5ம் தேதி முதல்

# வாக்கு எண்ணிக்கை மையத்தில் தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பு

ஈரோடு, ஜன.28: ஈரோடு இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மையத்தில் தீ விபத்து மற்றும் அசம்பாவித சம்பவங்களை தடுக்க வரும் பிப்ரவரி 5ம் தேதி முதல் தீயணைப்பு வீரர்கள் வாகனத்துடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 237 வாக்குச்சாவடிகளில் வரும் பிப்ரவரி மாதம் 5ம் தேதி நடைபெற உள்ளது. வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அடங்கிய பெட்டிகள், ஈரோடு அடுத்த சித்தோடு ஐஆர்டிடி கல்லூரியில் அமைக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கை மையங்களுகு எடுத்து செல்லப்பட்டு, பாதுகாப்பு அறையில் வைத்து சிலிடப்பட உள்ளன.

இதையடுத்து அனுமதிக்கப்பட்ட தேர்தல் அலுவலரை தவிர வேறு யாரும் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கும், பாதுகாப்பு அறை பகுதிக்கும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். வாக்கு எண்ணிக்கை நாளான பிப்ரவரி 8ம் தேதி (செவ்வாய்) காலை கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் முன்னிலையில் திறக்கப்பட்டு வாக்கு எண்ணிக்கை துவங்கப்படும். அதுவரை துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ வீரர்களும், போலீசாரும் வாக்கு எண்ணிக்கை மையத்திலும், வாக்குப்பெட்டிகள் வைத்துள்ள அறையிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

இந்நிலையில், வாக்கு பெட்டிகள் வைத்துள்ள பாதுகாப்பு அறை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் தீவிபத்து போன்ற அசம்பாவித சம்பவங்கள் நிகழாமல் இருக்க பிப்ரவரி 5ம் தேதி வரை காலை முதல் வாக்கு எண்ணிக்கை மையத்தில் 7 தீயணைப்பு வீரர்கள் ஒரு வாகனத்துடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இரண்டு ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியில் இருப்பர். தீயணைப்பு வீரர்கள் வாக்கு எண்ணிக்கை நிறைவு பெறும் வரை அதாவது பிப்ரவரி 8ம் தேதி வரை தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு மேற்கொள்ள உள்ளனர் என மாவட்ட தீயணைப்பு அலுவலர் முருகேசன் தெரிவித்தார்.

Fire brigade security will be arranged at counting centre from Feb'5.

Scanned with OKEN Scanner

தினகரன் 28 JAN 2025

# 75 ஆயிரம் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் விநியோகம்

ஈரோடு, ஜன. 28: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி, இதுவரை 75 ஆயிரம் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டிருப்பதாக மாவட்ட தேர்தல் அலுவலர் ராஜகோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, பிப்ரவரி 5ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதனையொட்டி, தேர்தல் தொடர்பான பல்வேறு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. கிழக்கு தொகுதியில், 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் உள்ளனர். இந்நிலையில், கடந்த 26ம் தேதி முதல், 237 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம், வாக்காளர்களுக்கு வீடு வீடாக சென்று பூத் சிலிப் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை, 75 ஆயிரத்து 288 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி நேற்று மணல்மேடு பகுதியில் வீடு வீடாக சென்று பூத் சிலிப் கொடுக்கும் பணியில் அலுவலர்கள் ஈடுபட்டனர்.

Booth slips were distributed to 75,000 voters.

Scanned with OKEN Scanner

28 JAN 2025

தினகரன்

## இடைத்தேர்தலில் வாக்குச்சாவடி அலுவலர்கள்

# விதிமுறைகளை பின்பற்றி பணியாற்ற வேண்டும்

### மாவட்ட தேர்தல் அலுவலர் அறிவுறுத்தல்

ஈரோடு, ஜன. 28: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, வாக்குச்சாவடி அலுவலர்கள் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா அறிவுறுத்தியுள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை 8ம் தேதி நடக்கிறது.

தேர்தலில் திமுக சார்பில் வி.சி.சந்திரகுமார், நாதக சார்பில் சீதாலட்சுமி உள்பட 46 பேர் களத்தில் உள்ளனர். வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தபால் வாக்களிக்க, முதியோர், மாற்றுத்திறனாளிகள் என 256 பேர் பதிவு செய்திருந்த நிலையில், அவர்களுக்கான வாக்குப்பதிவு கடந்த 23ம் தேதி முதல் நடைபெற்றது.

கிழக்கு தொகுதியில் தேர்தலுக்காக அமைக்கப்பட்ட 237 வாக்குச்சாவடிகள், கூடுதலாக 20 சதவீதம் வாக்குச்சாவடிகள் சேர்த்து 284 முதன்மை அலுவலர், முதல் நிலை அலுவலர், 2ம் நிலை அலுவலர், 3ம் நிலை அலுவலர்கள் மற்றும் 1,200 வாக்காளர்களை கொண்ட வாக்குச்சாவடிகளுக்கு கூடுதலாக 58 நான்காம் நிலை அலுவலர்கள் என 1,194 அலுவலர்கள் பணியாற்ற உள்ளனர். இவர்களுக்கு கடந்த 19ம் தேதி முதற்கட்ட பயிற்சி வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, ரங்கம் பாளையம் ஆர்ஏஎன்எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், நேற்று 2ம் கட்ட பயிற்சி நடைபெற்றது. இதனை மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா நேரில் பார்வையிட்டார்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் குறித்து வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நேற்று சென்னிமலை ரோட்டில் உள்ள தனியார் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டது.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கையாள்வது குறித்து அதிகாரிகளுக்கு நேற்று விளக்கம் அளிக்கப்பட்டது.

பின்னர் அவர் நிருபர்களிடம் பேசியதாவது: ஈரோடு கிழக்கு தொகுதியில் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வர்க்குச்சாவடி மையங்களில் தேர்தல் நாளான பிப்ரவரி 5ம் தேதி பணியாற்ற ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் 284 முதல் நிலை அலுவலர்களும், 284 இரண்டாம் நிலை அலுவலர்களும், 284 மூன்றாம் நிலை அலுவலர்களும், மேலும், 1,200 வாக்காளர்களை கொண்ட வாக்குச்சாவடிகளுக்கு 58 நான்காம் நிலை அலுவலர்கள் என மொத்தம் 1,194 அலுவலர்கள் பணியாற்ற உள்ளனர்.

வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள ஒரு முதன்மை அலுவலர் மற்றும் மூன்று நிலைகளிலான வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்துவது மற்றும் வாக்குச்சாவடிகளில் பணியாற்றுவது தொடர்பான முதற்கட்ட பயிற்சி கடந்த 19ம் தேதி நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து, இடைத்தேர்தலில் வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள முதன்மை அலுவலர் மற்றும் மூன்று நிலைகளிலான வாக்குச்சாவடி அலுவலர்கள் என 1,194 அலுவலர்களுக்கு வாக்குச்சாவடிகளில் பணியாற்றுவது குறித்த 2ம் கட்ட பயிற்சி நேற்று நடைபெற்றது. இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து, வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்களை பயன்படுத்துவது குறித்தும், செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது குறித்தும், வாக்குப்பதிவு இயந்திரங்களை கையாளுவது குறித்தும் ராஜகோபால் சுன்கரா எடுத்துரைத்தார். மேலும், வாக்குச்சாவடி அலுவலர்கள் அனைவரும், இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி சிறந்த முறையில் பணியாற்றுமாறு அவர் அறிவுறுத்தினார். ஆர்ஏஎன்எம் கலை அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த மாதிரி வாக்குச்சாவடியினை ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்த், ஒருங்கிணைப்பாளர் (பயிற்சி) மகேஸ்வரி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜன் உட்பட தொடர்புடைய அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

The Election Officer/Erode District Collector advises the By-election polling officials should follow the rules and regulations strictly.

Scanned with OKEN Scanner

தினகரன் 28 JAN 2025

உரிய ஆவணங்களின்றி எடுத்து வரப்பட்ட

# ரூ.87 ஆயிரம் பறிமுதல்

ஈரோடு, ஜன. 28: ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறவுள்ளது. முன்னதாக தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 7ம் தேதி முதல் ஈரோடு கிழக்குத் தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன.

அதன்படி, வாக்காளர்களுக்கு பரிசுப் பொருட்கள், பணம் உள்ளிட்டவைகளை கொடுப்பதை தடுக்கும் வகையில், பறக்கும் படை அலுவலர்கள் குழு மற்றும் கண்காணிப்பு நிலைக் குழுவினர் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி, உரிய ஆவணங்களின்றி ரூ 50 ஆயிரத்துக்கு மேலாக எடுத்து செல்லப்படும் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு, தேர்தல் கட்டுப்பாடு பிரிவு மூலமாக மாவட்ட கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தேர்தல் பறக்கும் படை அலுவலர் நவீன் தலைமையிலான குழுவினர், கருங்கல்பாளையம் செக்போஸ்டில் நேற்று அதிகாலை வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அந்த வழியாக வந்த நபர் ஒருவரை தடுத்து நிறுத்தி சோதனையிட்டதில், அவர் உரிய ஆவணங்களின்றி ரூ.87 ஆயிரத்து 500 எடுத்து வந்தது தெரியவந்தது.

விசாரணையில் அவர், நாமக்கல் மாவட்டம் சங்ககிரி பகுதியை சேர்ந்தவர் என்பதும் வியாபாரம் சம்பந்தமாக அந்த பணத்தை எடுத்து வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து, அந்த பணத்தை பறிமுதல் செய்த தேர்தல் பறக்கும் படை அலுவலர் நவீன், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தார்.

பின்னர் அந்த தொகை மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அறிவிக்கப்பட்ட 7ம் தேதி முதல் நேற்று காலை வரை உரிய ஆவணங்களின்றி எடுத்துவரப்பட்ட 36 லட்சத்து 24 ஆயிரத்து 560 ரூபாயை தேர்தல் பறக்கும்படையினர் பறிமுதல் செய்தனர். அதில், உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து ரூ.12 லட்சத்து 93 ஆயிரத்து 60 உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ரூ.23 லட்சத்து 31 ஆயிரத்து 500 மாவட்டக் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

The amount of Rs.87 thousand without proper documents seized.

Scanned with OKEN Scanner

**தினமணி** 28 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி: 246 பேர் அஞ்சல் வாக்குப் பதிவு

ஈரோடு, ஜன.27: ஈரோடு கிழக்கு தொகுதியில் முதியோர், மாற்றுத்திறனாளிகள் 246 பேர் அஞ்சல் வாக்குப் பதிவு செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் அனைவரும் வாக்களிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த தொகுதியில் 1 லட்சத்து 9 ஆயிரத்து 636 ஆண்கள், 1 லட்சத்து 16 ஆயிரத்து 760 பெண்கள், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேர் என மொத்தம் 2 லட்சத்து 26 ஆயிரத்து 433 வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட உள்ளன.



ஈரோடு திருநகர் காலனி பகுதியில் அஞ்சல் வாக்குச் செலுத்திய முதியவர்.

இதில், 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2,526 பேர் உள்ளனர். இவர்களில் 209 பேரும், மாற்றுத்திறனாளிகள் 1,570 பேரில் 47 பேரும் வீட்டில் இருந்தவாறே தங்களது வாக்குகளை அஞ்சல் மூலமாக செலுத்திட விருப்பம் தெரிவித்தனர்.

இதற்காக தொகுதிக்குள்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கடந்த 15-ஆம் தேதிக்கு முன்னரே 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களிடம் அஞ்சல் வாக்குகளை செலுத்துவதற்கான படிவம் '12 டி' வழங்கி ஒப்புதல் பெற்றிருந்தனர். இதைத்தொடர்ந்து, 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர், மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்குச் சென்று அஞ்சல் வாக்குகளைப் பெறும் பணி கடந்த 23 -ஆம் தேதி தொடங்கியது.

இதற்காக ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து அஞ்சல் வாக்குகளைப் பெறுவதற்காக நியமிக்கப்பட்ட 4 குழுவினர் சம்பந்தப்பட்ட வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று அஞ்சல் வாக்குகளைப் பெறும் பணியை மேற்கொண்டனர்.

இதில், ஒவ்வொரு குழுவிலும் ஒரு தேர்தல் நுண் பார்வையாளர், வாக்குச்சாவடி அலுவலர்கள் 2 பேர், ஒரு விடியோகிராபர், ஒரு துப்பாக்கி ஏந்திய காவலர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இருந்தனர்.

இந்த 4 குழுவினரும் ஈரோடு, கருங்கல்பாளையம், வீரப்பன்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று அந்தந்த பகுதிகளில் உள்ள அஞ்சல் வாக்குகளைச் செலுத்தவுள்ள வாக்காளர்களிடம் வாக்குகளைப் பெறும் பணியில் ஈடுபட்டனர். அப்போது, வாக்காளரின் அடையாளத்தை சரிபார்த்து, அதன் விவரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து, வாக்காளரின் கையொப்பம் பெற்று வாக்களிக்கும் முறை குறித்து விளக்கி, அஞ்சல் வாக்குச் சீட்டை வழங்கினர். தொடர்ந்து முதியவர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர். பின்னர் வாக்குச் சீட்டுகளை அதிகாரிகள் பெற்றுக்கொண்டனர்.

அஞ்சல் வாக்குகளை செலுத்த இறுதி நாளான திங்கள்கிழமை வரை 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 199 பேர், 47 மாற்றுத் திறனாளிகள் என மொத்தம் 246 வாக்காளர்கள் அஞ்சல் வாக்குகளை செலுத்தியுள்ளனர். 85 வயதுக்கு மேற்பட்ட 6 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாலும், ஒரு வாக்காளர் வெளியூர் சென்றதாலும், 3 வாக்காளர்கள் மரணமடைந்ததாலும் மொத்தம் 10 வாக்குகள் பதிவு செய்யப்படவில்லை.

Erode East Assembly Constituency By-election.
246 persons cast their postal votes.

Scanned with OKEN Scanner

தினமணி 28 JAN 2025

# ஈரோடு கிழக்கில் 75,288 பேருக்கு பூத் சிலிப் விநியோகம்

ஈரோடு, ஜன.27: ஈரோடு கிழக்கு தொகுதியில் இரண்டு நாள்களில் 75,288 பேருக்கு வாக்குச் சாவடி தகவல் சீட்டு (பூத் சிலிப்) வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிப்ரவரி 5 -ஆம் தேதி நடைபெறுகிறது.

இந்நிலையில், வாக்காளர்களுக்கு வாக்குச் சாவடி தகவல் சீட்டு வழங்கும் பணி கடந்த 26-ஆம் தேதி தொடங்கியது. இப்பணி 31-ஆம் தேதி வரை நடைபெறும். வீடுவீடாகச் சென்று வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை 40,429 பேர்; திங்கள்கிழமை 34,859 பேர் என மொத்தம் 75,288 பேருக்கு வாக்குச் சாவடி தகவல் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
Booth slips were distributed to 75,288 voters.

Scanned with OKEN Scanner

தினசூரியன்

28 JAN 2025

# ஈரோட்டில் தபால் வாக்கு பதிவு நிறைவு 246 வாக்காளர்கள் வாக்களிப்பு

ஈரோடு, ஜன. 28-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று வாக்களிக்க இயலாத 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் தபால் வாக்குகளை பெறும் பணி நிறைவடைந்தது.

256 வாக்காளர்களில் 246 பேர் வாக்குகளை செலுத்தி உள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ள நிலையில், இதில் 2 லட்சத்து 46 ஆயிரத்து 433 வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இதன்படி இந்த தொகுதியில் தகுதியுள்ள 1570 மாற்றுத்திறன் மற்றும் 2529 முதியோர்களில், 85 வயதுக்கும் மேற்பட்ட முதியோர் 209 பேரும், மாற்றுத்திறனாளிகள் 47 பேரும் என 256 பேர் இதற்காக 12 படிவம் கொடுத்து விருப்பம் தெரிவித்திருந்தனர்.

இந்த 256 பேரின் வீடுகளுக்கு தேர்தல் வாக்குச்சாவடி அலுவலர்கள் நேரில் சென்று வாக்குச்சீட்டு முறையில் வாக்குகளை பெறும் பணி கடந்த 23ம் தேதி தொடங்கியது. இதற்காக, தலா 2 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், ஒரு நுண் பார்வையாளர்,

தபால் வாக்குகளுக்கான படிவத்தில் கையொப்பம் பெற்ற பின் வேட்பாளர் பெயருடன் சின்னம் பொறித்த தபால் வாக்குச்சீட்டு தரப்பட்டு தற்காலிக தடுப்பு மூலம் மறைவாக வாக்குச்சீட்டில் வாக்கை பதிவு நடைபெற்றது. அதிகாரிகள் எடுத்து செல்லும் பெட்டிகளில் வாக்கு சீட்டை சேகரிக்கப்பட்டன. கடந்த 4 நாட்களாக நடைபெற்ற இந்த பணி நேற்றுடன் நிறைவடைந்தது. 256 பேரில் மூன்று பேர் உயிரிழந்த நிலையில் 7 பேர் வெளியூர் சென்றதால் 246 பேரிடம் வாக்குகள் பெறப்பட்டன.

Postal balloting ends.
246 voters cast their postal votes.

Scanned with OKEN Scanner


காலைக்கதிர் 28 JAN 2025

# இடைத்தேர்தல் நடக்கும் வார்டில் 'மாஸ் கிளீனிங்' விதி மீறலில் வராதா என எதிர்க்கட்சிகள் கேள்வி

ஈரோடு, ஜன. 28-

இடைத்தேர்தல் நடக்கும் மாநகராட்சி வார்டில், 'மாஸ் கிளீனிங்' நடந்தது. இந்த செயல் தேர்தல் விதிமீறலில் வராதா? என, எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட, மாநகராட்சி ஏழாவது வார்டு பகுதிகளான பி.பெ.அக்ரஹாரம், அண்ணா நகர், நஞ்சப்பா நகர் உள்ளிட்ட பகுதிகளில், 'மாஸ் கிளீனிங்' நேற்று நடந்தது. சுகாதார ஆய்வாளர் கண்ணன் மேற்பார்வையில் நடந்த பணியில், துாய்மை பணியாளர், கொசு ஒழிப்பு பணியாளர், பொறியியல் பணியாளர்கள் ஈடுபட்டனர். தெருக்களை கூட்டி சுத்தம் செய்தல், பிரதான சாலைகளில் தேங்கிய மணலை அள்ளுதல், தேவையற்ற குப்பை அகற்றுதல், டெங்கு கொசு புழு உற்பத்தியாகும் இடங்களில் புகை மருந்து அடித்தல், வாய்க்கால் துார்வாருதல் உள்ளிட்ட பணிகள் நடந்தன.



ஈரோடு மாநகராட்சி ஏழாவது வார்டுக்குட்பட்ட பி.பெ.அக்ரஹாரம், அண்ணா நகர் உள்ளிட்ட பகுதிகளில், மாஸ் கிளீனிங் நேற்று நடந்தது.

இதுகுறித்து சுகாதார ஆய்வாளர் கண்ணன் கூறியதாவது: ஏழாவது வார்டில் சிறு, சிறு சந்துகள் அதிகம் உள்ளன. துாய்மை பணியாளர்கள் இன்று (நேற்று) அதிகம் பேர் இருந்தனர். எனவே இப்பகுதியில் உள்ள சாக்கடைகளை துாய்மை செய்யும் பணியை மேற்கொண்டோம். இது வழக்கமானது தான். இவ்வாறு அவர் கூறினார். அதேசமயம் இதைப் பார்த்த எதிர்க்கட்சியினர், தேர்தல் நடத்தை விதிமீறலில் இது வருமா, வராதா? என்று கேள்வி எழுப்பியுள்ளனர். தேர்தல் விதிமீறலை கண்காணிக்கும் அதிகாரிகளுக்கே வெளிச்சம்.

Opposition parties question whether 'Mass Cleaning' work in By-election wards will not come under violation of ECC?

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 28 JAN 2025

# ஆவணங்கள் இல்லாத ரூ. 87,000 பறிமுதல்

ஈரோடு, ஜன. 28-

ஈரோடு, கருங்கல்பாளையம் செக்போஸ்ட் அருகே, தேர்தல் பறக்கும் படை அதிகாரி நவீன் தலைமையிலான குழுவினர் நேற்று காலை வாகன தணிக்கை செய்தனர்.

நாமக்கல் மாவட்டம் சங்ககிரியை சேர்ந்த ஜவுளி வியாபாரி மயிலானந்தத்திடம், 85,500 ரூபாயை ஆவணங்களின்றி எடுத்து வந்தார். தொகையை பறிமுதல் செய்து, கருவூலத்தில் செலுத்தினர்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட கடந்த, 7ம் தேதி முதல் நேற்று வரை, 36 லட்சத்து, 24,560 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில், 12 லட்சத்து, 93,060 ரூபாயை ஆவணங்கள் அடிப்படையில் திரும்ப ஒப்படைத்தனர். மீதி, 23 லட்சத்து, 31,500 ரூபாய் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

Flying squad seized Rs.87 thousand without proper documents.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 28 JAN 2025


# தபால் ஓட்டளிக்க ஆர்வம் காட்டாத முதியோர், மாற்றுத்திறனாளிகள்

## மொத்தம்-4,099; பதிவானது 246

ஈரோடு, ஜன. 28-

இடைத்தேர்தலில் தபால் ஓட்டளிக்க, 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் ஏனோ அதிக ஆர்வம் காட்டவில்லை.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர், மாற்றுத் திறனாளிகள், ஓட்டுச்சாவடிக்கு சிரமப்பட்டு வந்து ஓட்டளிப் பதை தவிர்க்கும் வகையில், தபால் ஓட்டு பெற முடிவு செய் யப்பட்டது.



■ முதியோர், மாற்றுத்திறனாளி களிடம் சேகரிக்கப்பட்ட தபால் ஓட்டு பெட்டிகள், மாநகராட்சி அலு வலகத்தில் வைத்து, அறையை பூட்டி 'சீல்' வைக்கப்பட்டது.

தொகுதியில், 85 வயதுக்கு மேற்பட்டோர், 2,529 பேர், மாற்றுத்திறனாளிகள், 1,570 பேர் என, 4,099 வாக்காளர் கண்டறியப்பட்டனர். அவர் களுக்கு ஓட்டளிப்பதற்கான படிவம் வீடு தேடிச்சென்று வழங்கப்பட்டது.

இதை தொடர்ந்து கடந்த, 23, 24, 25 மற்றும் நேற்று வரை இவர்களிடம் தபால் ஓட்டு பெறும் பணி நடந்தது. முன்னதாக தபால் ஓட்டளிக்க, 256 பேர் விருப்பம் தெரிவித்தி ருந்தனர்.

இதில் மூன்று பேர் இறந்து விட்டனர். 7 பேர் வாக்களிக்க வில்லை. 85 வயதுக்கு மேற் பட்டோரில், 199 பேர், மாற்றுத் திறனாளிகள், 47 பேர் என, 246 பேர் மட்டுமே தபால் ஓட்டுப் பதிவு செய்துள்ளனர்.

No interest in postal balloting by the elderly and physically people.

Total Postal votes 4,099.

246 postal votes polled.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர்

28 JAN 2025

# கியூ-ஆர் கோடுடன் 'பூத் சிலிப்' வினியோகம்

**ஈரோடு, ஜன. 28-**



■ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக, வீடு வீடாக சென்று பூத் சிலிப் வழங்கும் பணி நடக்கிறது. இடம்: ரயில்வே காலனி குடியிருப்பு.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் ஓட்டுப்பதிவு, பிப்.,5ல் நடக்கிறது. இதற்காக வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி நேற்று முன் தினம் தொடங்கியது.

இதுகுறித்து தேர்தல் பிரிவு அலுவலர்கள் கூறியதாவது: வழக்கமாக பூத் சிலிப்பில் வாக்காளர் விபரம், ஓட்டுச்சாவடி விபரம் மட்டும் இடம் பெறும்.

இம்முறை தேர்தல் ஆணையம் மூலம் வாக்காளர் பட்டியல் விபரத்தை, அதற்கான ஏஜென்ட்கள் மூலம் சென்னையில் பிரிண்ட் செய்து, எங்களுக்கு நேற்று முன்தினம் கிடைக்க பெற்றது. இதையடுத்து உடனடியாக பூத் சிலிப் வழங்கும் பணியை துவங்கினோம். முன்பு ஈரோட்டில் அச்சிடப்படும்.

சென்னையில் அச்சடிக்கப்பட்ட பூத் சிலிப்பில், மாநிலம், தொகுதி, வாக்காளர் பெயர், பாலினம், வாக்காளர் அடையாள அட்டை எண், தந்தை அல்லது கணவர் பெயர், பாகம் எண், பாகத்தின் பெயர், வரிசை எண், ஓட்டுச்சாவடியின் பெயர், வாக்காளர் விபரம் கடைசியாக பதிவேற்றம் செய்த நாள், 'ஏப் எலக்ஷன் அதிகாரி' இணைய தள முகவரி, அவரது அலுவலகத்தை தொடர்பு கொள்ளும் இலவச அழைப்பு எண், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலக விபரம், அவருக்கான இலவச அழைப்பு எண், தேர்தல் தேதி, வாக்காளிக்கும் நேரம் காலை, 7:00 மணி முதல் மாலை, 6:00 மணி வரை மற்றும் லொக்கேஷனுடன் கூடிய க்யூ.ஆர். கோடும் இடம் பெற்றுள்ளது.


தவிர, 'இந்த சீட்டு அடையாள ஆவணமாக ஏற்று கொள்ளப்பட மாட்டாது' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பூத் சிலிப் வழங்கும் பணியில், ஓட்டுச்சாவடி அலுவலர், அங்கன்வாடி, சத்துணவு பணியாளர் என, 600க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரண்டு நாளில், 75,288 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. வரும், 31ம் தேதிக்குள் கொடுத்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறினர்.

Booth slip with QR code distributed.

Scanned with OKEN Scanner

தமிழ் சுடர்  28 JAN 2025



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்காக ரங்கா பாளையத்தில் உள்ள ஆர் ஏ என் எம் கலை அறிவியல் கல்லூரியில் நடந்த இரண்டாம் கட்ட வாக்குச் சாவடிகளின் பணியாற்ற உள்ள முதன்மை அலுவலர் மற்றும் நிலை அலுவலர்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்துவது மற்றும் வாக்குச்சாவடிகளில் பணியாற்றுவது தொடர்பாக நடைபெற்ற பயிற்சியில் மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா பேசினார்.

Erode East Assembly Constituency By-election.
2nd Phase training for the polling officials.

Scanned with OKEN Scanner

மாலை மலர் 26 JAN 2025



வாக்குப்பதிவு மையங்களுக்கு அனுப்பப்படவுள்ள வாக்குப்பதிவு எந்திரங்கள் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்வதற்கான பணி பொது பார்வையாளர் அஜய்குமார் குப்தா, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைதேர்தல்

# கூடுதல் மின்னனு வாக்குபதிவு எந்திரங்கள் கணிணி சுழற்சி முறையில் ஒதுக்கீடு

ஈரோடு, ஜன. 26—

இந்திய தேர்தல் ஆணையத்தால் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டு, வருகிற பிப்ரவரி 5—ந் தேதி அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப்பதிவிற்காக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

#### ஒதுக்கீடு

இந்திய தேர்தல் ஆணைய அறிவுரையின்படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு கணினி முறையில் ஆணைய இணையதளத்தின் மூலம் கடந்த 13—ந் தேதி அன்று 20 சதவீதம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம், 20 சதவீதம் கட்டுப்பாட்டு கருவி மற்றும் 30 சதவீதம் வி.வி.பேட் என ரிசர்வும் சேர்த்து தற்போது 284 மின்னணு வாக்குப்பதிவு எந்திரம், 284 கட்டுப்பாட்டு கருவி, 308 வி.வி.பேட் இயந்திரங்கள் கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.


அதனைத் தொடர்ந்து ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதால் இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் கணினி துணை சுழற்சி முறையில் கூடுதலாக 568 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட கலெக்டருமான ராஜ கோபால் சுன்கரா தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் முன்னி

இந்நிகழ்வில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஈரோடு மாநகராட்சி ஆணையர் ஸ்ரீகாந்த், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், உதவி கலெக்டர் ராமகிருஷ்ணசாமி, துணை ஆட்சியர் சிவபிரகாசம், வட்டாட்சியர் சிவசங்கர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ் உட்பட தொடர்புடைய தேர்தல் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Erode East Assembly Constituency By-election.
Additional EVMs were allotted by randomisation.

Scanned with OKEN Scanner

மாலை மலர் 26 JAN 2025




பறிமுதல் செய்த பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் தேர்தல் அலுவலர்களிடம் ஒப்படைத்த காட்சி.

## ஈரோடு கிழக்கு தொகுதியில்

# ஒரே நாளில் ரூ.9 லட்சம் பறிமுதல்

## நிலை கண்காணிப்பு குழு-பறக்கும் படையினர் அதிரடி நடவடிக்கை

ஈரோடு, ஜன. 26—

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. இதனால்,வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் 3 பறக்கும் படை, 3 நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

### சோதனை

இக்குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் தீவிர வாகன சோதனை மற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டு. வருகின்றனர். மேலும் உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு செல்லப்படும் பணத்தை பறிமுதல் செய்து வருகின்றனர். இந்நிலையில், நேற்று காலை கருங்கல்பாளையம், காவிரி ரோடு அருகே நிலை கண்காணிப்பு குழுவினர் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். இதில், உரிய ஆவணங்களின்றி கொண்டு வரப்பட்ட ரூ.1 லட்சத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பின்னர் நடத்திய விசாரணையில், கார் உரிமையாளர் மதன் என்பதும் நாமக்கல் மாவட்டம் களத்துவலவு பகுதியை சேர்ந்தவர் என்பது தெரியவந்தது.

இதேபோன்று, நிலை கண்காணிப்பு குழுவினர் பி.பி.அக்ரஹாரத்தில் சோதனை மேற்கொண்டனர். அப்போது அவ்வழியாக வந்த காரில் சோதனை மேற்கொண்ட போது, உரிய ஆவணங்களின்றி கொண்டு வரப்பட்ட ரூ.2.50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. காரை ஒட்டி வந்தவர் ராமன் என்பதும், அவர் அந்தியூர் அடுத்த தவுட்டுப்பாளையம் என்பதும் தெரியவந்தது.

பழையபாளையம் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில், உரிய ஆவணங்களின்றி காரில் கொண்டு வரப்பட்ட ரூ.2.50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. காரை ஒட்டி வந்தவர் கவிதா என்பதும் திருப்பூர் மாவட்டம் கணியம்பூண்டி என்பதும் தெரிய வந்தது.

இதேபோல் நேற்று இரவு 11.20 மணி அளவில் வில்லரசம்பட்டி பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். காரில் ரூ.2.90 லட்சம் பணம் இருந்தது தெரிய வந்தது.

இது குறித்து காரில் வந்தவரிடம் விசாரித்த போது அவர் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி பகுதியை சேர்ந்த ஆசிக் முகமது என்பது தெரிய வந்தது. அவரிடம் பணத்திற்குரிய ஆவணம் இல்லாததால் அந்த பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

நேற்று ஒரே நாளில் ரூ.9 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை ரூ.33 லட்சத்து 85 ஆயிரத்து 60 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங்களை சமர்பித்ததால் இதுவரை 12 லட்சத்து 93 ஆயிரத்து 60 ரூபாய் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
Static Surveillance Team and Flying Squad seized the amount of Rs.9 Lakhs in a single day.

Scanned with OKEN Scanner

மாலை மலர் 26 JAN 2025

ஈரோட்டில் உரிய அனுமதி பெறாமல்

# தேர்தல் நடத்தை விதிகளை மீறிய சீமான் மீது ஒரே நாளில் 3 வழக்குகள் பதிவு

ஈரோடு, ஜன. 26—

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி தி.மு.க, நாம் தமிழர், சுயேட்சை வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

### பிரசாரம்

அந்த வகையில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோட்டில் தங்கி தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

நேற்று 2—வது நாளாக காளைமாட்டு சிலை, மரப்பாலம் மற்றும் கச்சேரி வீதி ஆகிய பகுதிகளில் திறந்தவெளி வாகனத்தில் நின்றபடி பொதுமக்களிடம் வாக்கு கேட்டார்.

### 37 பேர் மீது வழக்கு

காளைமாட்டு சிலையில் தமிழர் கட்சியினர் தேர்தல் நடத்தை விதிகளை மீறி உரிய அனுமதி இல்லாமல் கட்சி கொடிகள், பேனர்கள் மற்றும் ஒலிப்பெருக்கி பயன்படுத்தி தேர்தல் பிரச்ாரத்தில் ஈடுபட்டதாக் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி உள்பட 37 பேர் மீது பறக்கும்படை அதிகாரிகள் அளித்த புகாரின் பேரில் சூரம்பட்டி போலீசார் வழக்குபதிவுசெய்துள்ளனர்.

இதேபோல் மரப்பாலம் பகுதியில் உரிய அனுமதி இல்லாமல் பிரசாரம் மேற்கொண்டதாக சீமான் உள்பட 8 பேர் மீது தேர்தல் விதிகளை மீறியதாக ஈரோடு டவுன் போலீஸ் நிலையத்தில் பறக்கும்படை அதிகாரிகள் கொடுத்த புகாரின் பேரில் டவுன் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இதேபோல், கச்சேரி வீதியில் உரிய அனுமதி பெறாமல் தெருமுனை கூட்டத்தில் பிரசாரம் மேற்கொண்டதாக சீமான் உள்பட 6 பேர் மீது ஈரோடு டவுன் போலீஸ் நிலையத்தில் பறக்கும்படை அதிகாரிகள் அளித்த புகாரின் பேரில் டவுன் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இதன்மூலம் நேற்று ஒரே நாளில் மட்டும் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது 2 போலீஸ் நிலையங்களில் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

3 cases filed on Seeman in a single day for violating ECC in Erode.

Scanned with OKEN Scanner